# முரசொலி

பக்கங்கள் நான்கு

விலை ரூபா 5.00

முரசு ப6 ஒலி 87 பிரசோற்பத்தி மாசி 10 ( 22 · 02 1992 ) சனி


## தம்பலகாமம் அகதி முகாமில் அனைத்துஇளைஞரும்கைது

திருமலையில் தம்பலகாமம் அகதி முகாமில் இருந்த அனைத்து தமிழ் இளைஞர்களும் இராணுவத்தினரால் மூகாம் கொண்டு செல்லப்பட்டுள்ள தாக தற்போது செய்திகள் வெளியாகியுள்ளன. இவ்வாறு இராணுவத்தினரால் மூகாம் கொண்டு செல்லப்பட்ட இளைஞர்களின் விவரம் ஏதும் இது வரை அவர்களின் உறவினர்களுக்கு கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# 23 விமானப் படையினர் திருமலைத் தாக்குதலில் பலி!

## வவுனியாவில் 50 பேர் கடத்தல்

கடந்த நான்கு நாள்களில் வவுனியாவில் சுமார் 50 பேர் தமிழ்க் குழு ஒன்றினால் கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## 749 அகதிகள் திருமலைக்கு

749 ஈழத் தமிழ் அகதிகள் நேற்று சென்னையிலிருந்து திருகோணமலை நோக்கி கப்

— 04 ஆம் பக்கம்பார்க்க

## விமானத் தாக்குதல்களின் மத்தியிலும் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்

திருகோணமலையில் நேற்று ஸ்ரீலங்கா விமானப்படை ரோந்து அணிமீது விடுதலைப்புலிகள் நடத்திய திடீர்த் தாக்குதலில் 23 விமானப் படையினர் பலியாகினர். இவர்களிடமிருந்து ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

நேற்றுக்காலை 8 30 மணியளவில் திருமலை வேப்பங்குளம் விமானப் படைமுகாமிலிருந்து 30பேரடங்கிய விமானபபடை ரோந்து அணியொன்று10 ஆம் கட்டை முகாமிற்கு கால்நடையாகச் சென்றது.

இந்த ரோந்து அணியை திடீரென சுற்றிவளைத்த புலிகள் இவர்கள் மீது சுமார் 20நிமிட நேரம் தொடர்ந்து கடும் தாக்குதலை நடத்தினர்.

இத்தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருந்த போது வேப்பங்குளம் முகாமிலிருந்தும், 10 ஆம் கட்டை முகாமிலிருந்தும் விமானப்படையினர் உதவிக்கு விரைந்தனர்.

இரு ஹெலிகப்டர்கள், இரு பொம்மர்கள் நடத்திய தாக்குதலின் மத்தியிலும் புலிகளின் தாக்குதலுக்குள்ளான விமானப்படையினருக்குஉதவ வந்த அணிகள் மீதும் புலிகள் தாக்குதலை ஆரம்பித்தனர்

—04 ஆம் பக்கம் பார்க்க

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

திருகோணமலையில் நேற்று விமானப் படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்:

- ★ ரி. 81 எல். எம். ஜி - 01
- ★ ஏ கே. எல். எம் ஜி - 01
- ★ ரி - 81 துப்பாக்கிகள் - 09
- ★ ரி - 56 துப்பாக்கிகள் - 12
- ★ ரி - 81 துப்பாக்கி மகஸீன்கள் - 34
- ★ ரி - 56 துப்பாக்கி மகஸீன்கள் - 46
- ★ ஐ. எம் ரவைகள் - 2.000
- ★ லிங் - 250
- ★ ரி - 81 எல். எம். ஜி மகஸீன் - 03
- ★ ஏ. கே. எல், எம், ஜி மகஸீன் - 01

—04 ஆம் பக்கம் பார்க்க

## கேணல் சரத் முனசிங்க சொல்கிறார்
## 3 நாள் ஊரடங்குச் சட்டம் வெற்றியளித்துள்ளதாம்

கடந்த வாரம் யாழ். குடாநாட்டில் அமுல் செய்யப்பட்டிருந்த மூன்று நாள் ஊரடங்குச்சட்டம் பாதுகாப்புப் படையினருக்கு வெற்றியளித்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் கேணல் சரத முனசிங்க நேற்று முன்தினம் தெரிவித்தார்.

எனினும் இது குறித்து செய்தியாளர்கள் விவரம் கேட்டபோது மேலதிக விவரம் எதுவும் கூற முனசிங்க மறுத்துவிட்டதாக கொழும்புப்பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## வீரச்சாவு

திருமலையில் விமானப் படையினர்மீது நடத்தப்பட்ட தாக்குதலில் லெப். விகனேசு (அ. யூட்லி, ஊர்காவற்றுறை), 2 ஆம் லெப். கர்ணன் (இ தெய்வேந்திரன், மூதூர்) ஆகியோர் வீரச்சாவு எய்தினர்.

## ஜெயலலிதாவின் பாதுகாப்புக்கு தினமும் 2 லட்சம் ரூபா செலவு

தமிழகத்தின் முன்னைய முதலமைச்சர்களுக்கு பாதுகாப்பு அதிகமாக வழங்கப்பட்டிருந்த போதும் தற்போதைய முதல்வர் ஜெயலலிதாவுக்கு தேவையற்ற விதத்தில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக தமிழக எதிர்க்கட்சிகள் கண்டனம் வெளியிட்டுள்ளன.

ஜெயலலிதாவின் பாதுகாப்பிற்கென தினமும் இரண்டு லட்சம் (இந்திய) ரூபா செல

—04 ஆம் பக்கம் பார்க்க

## உலகக்கோப்பை கிரிக்கெட் அவுஸ்திரேலியாவில் ஆரம்பம்

உலகக்கோப்பைக்கான கிரிக்கெட் போட்டிகள் இன்று அவுஸ்திரேலியாவில் ஆரம்பமாகின்றன

தொடரின் முதலாவது ஆட்டம் அவுஸ்திரேலியாவின் பெர்த் நகரில் இந்திய, இங்கிலாந்து கிரிக்கெட் அணிகளிடையே நடைபெறும் மற்றுமோர் தொடக்க ஆட்டம் ஒக்லாந்தில் அவுஸ்திரேலியாவுக்கும் நியூசிலாந்துக்கும் இடையில் நடைபெறும்

...04 ஆம் பக்கம் பார்க்க

## பஞ்சாப்தேர்தல் முடிவுகள் காங்கிரஸ் ஸ்திரமான நிலை

பஞ்சாப்பில் நடைபெற்ற தேர்தல்களில் சட்டப்பேரவை தொகுதிகளிலும் பாராளுமன்றத் தொகுதிகளிலும் இந்திரா காங்கிரஸ் வெற்றி பெற்றுள்ளது.

தேர்தல் நடைபெற்ற 117 சட்டப்பேரவை தொகுதிகளில் இந்திரா காங்கிரஸ் 83 தொகுதிகளை கைப்பற்றியது பஞ்சாபின் 13 பாராளுமன்ற தொகுதிகளில் 12 தொகுதிகளையும் இந்திரா காங்கிரஸ் கைபற்றியது

இதன் மூலம் பஞ்சாப் மாநிலத்தில் ஆட்சியமைப்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## இஸ்ரேலின் அனுபவ உதவியை இந்தியா பெறத்திட்டம்!

இந்தியாவில் காணப்படும் தீவிரவாதத்திற்கு எதிராக போராட இஸ்ரேலின் அனுபவ உதவிகளை பெறலாமா என்று இந்திய அரசு ஆலோசிப்பதாக பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் நேற்று தெரிவித்தார்

இது தொடர்பாக ஆராய விரைவில் தாம் அமெரிக்கா செல்லவுள்ளதாகவும் [illegible]ர் தெரிவித்தார்.

## கிளிநொச்சியில் மாணவர் நேற்று ஊர்வலம்

மாணவர்கள் மீதான அரசின் அடக்குமுறைகளைக் கண்டித்து நேற்றுக் காலை கிளிநொச்சியில் மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்ட ஊர்வலம் நடைபெற்றது

காலை 9 மணியளவில் இரணைமடுச் சந்தியில் ஆரம்பமான ஊர்வலம் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் முடிவடைந்தது.

## பாராளுமன்றத்துக்கு அருகில் எம். பிக்களுக்கு வதிவிடம்

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வதிவிடம் அமைப்பது குறித்து சபை முதல்வரான அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வதிவிடம் அமைப்பதற்கு அரசாங்கம் கடந்த ஆண்டு 10 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

எதிர்க்கட்சியினர் இது குறித்து உண்மைக்கு மாறான தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

இவ்வாண்டு இறுதிக்குள்

—04ஆம் பக்கம் பார்க்க

## பிறப்புப் பத்திரப் புத்தகங்கள் சில மர்மமாக மறைந்தன

கொழும்பிலிருந்து குமண கப்பலில் யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கப்பட்ட 300 பிறப்பு அத்தாட்சி படிவப் புத்தகங்களில் 11 புத்தகங்களை காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ் மேலதிக பதிவாளர் அலுவலகத்துக்கு இப்புத்தகங்கள் கொண்டுவரப்பட்டு கணக்கெடுக்கப்பட்ட போது 289 புத்தகங்களே காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பிறப்புச் சான்றிதழ் விண்ணப்பதாரிகளுக்கு அடுத்த வாரம் முதல் சான்றிதழ் விநியோகிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (47, 25)

## ஜெயலலிதாவின் விஜயமே மரணத்துக்குக் காரணம் - கருணாநிதி

மஹாமகம் தீர்த்தோற்சவத்தின் போது கட்டிடம் இடிந்து விழுந்தும் சன நெரிசலினாலும் பலர் பலியாகக் காரணமாயிருந்த சம்பவங்கள் குறித்துஉயர் நீதிமன்றநீதிபதி தலைமையில் நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும் என மு.கருணாநிதி கேட்டுள்ளார்

நேற்று முன்தினம் மாநில அரசு விடுத்த அறிக்கைக்கு பதிலளிக்கையிலேயே திரு. கருணாநிதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்

மஹாமகம் தீர்த்தக்குளத்

.. 04 ஆம் பக்கம்பார்க்க

## உலகக் கோப்பை இறுதியாட்டம் மார்ச் 25 இல்

இன்று ஆரம்பமாகும் 5 ஆவது உலகக்கோப்பை கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் அடுத்த மாதம் மார்ச் 25 ஆம் திகதி நடைபெறும்.

முதல் இரு போட்டிகளில் மேற்கிந்திய அணியும், மூன்றாவது போட்டியில் இந்தியாவும் நான்காவது போட்டியில் (1987) அவுஸ்திரேலிய அணியும் உலகக்கோப்பையை தட்டிச்சென்றது தெரிந்ததே.

## செஞ்சிலுவைச் சங்கம் தெற்கில் வீடமைப்பு உதவி

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் 1991 - 1992 ஆண்டு களில் தென்பகுதியில் முந்நூறு வீடுகளை நிர்மாணித்துள்ளது.

கேகாலை, மாத்தறை, காலி ஆகிய மாவட்டங்களில் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன,

குறைந்த வருமானம் [illegible] இந்த வீடு[illegible] [illegible]கப்பட்டன.

## சாரணியத் தந்தை பேடன்பவல்

இற்றைக்கு 135 ஆண்டுகளுக்கு முன் 22-02-1857 இல் இப்பாரினில் தோன்றிய பேடன் பவல் பிரபு சாரணியத்தின் தந்தை. எம் அனைவருக்கும் தலை சிறந்த ஓர் அரிய இயக்கமாகிய சாரணியத்தை ஸ்தாபித்துத் தந்தவர்.

ஒருபோதும் சலிப்படையாத உள்ளமும், அயராத ஊக்கமும், நாட்டுக்கு நற்பிரசைகளை உருவாக்கும் திட்டத்தை உலகுக்கெடுத்தீட்டிய அவரது நற்தொண்டும் அவருக்கு 'இம்பீசா' என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றுக் கொடுத்தன "இம்பீசா" என்றால் ஒருபோதும் துயில் கொள்ளாத ஓநாய் என்பதே கருத்தாகும் பேடன் பவல் பிரபு யார், எப்படிப்பட்டவர் என்பதை இந்த ஒரு சொல்லே விளக்கிக் காட்டுகிறது.

இளைஞர்களை நல்லவாழ்வுக்கு அழைத்துச் செல்லவும், பிறந்த பொன்னாட்டிற்குப் பணி புரியும் நற்பிரசைகளாகவும், தம்மைச் சூழ வாழும் சமுதாயத்திற்குத் தொண்டாற்றித் தன்னாலான முயற்சி செய்து வாழக் கூடிய வகையில் சாரணியத்தை அமைத்தார்: கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் பண்புகளையும், நாள்தோறும் நற்பணி ஆற்றிட வேண்டும் எனும் நல் லெண்ணத்தையும் வளர்க்கும் ஒரே ஒரு அமைப்பு சாரணியம் என்றால் அது மிகையாகாது. இந்த இயக்கத்தின் தலைவர் இன்றில்லையாயினும் உலகம் அவரை நன்றிப் பெருக்கோடு நினைவில் வைத்துக் கொண்டாடுகிறது

உலகம் அமைதியாக இயங்க, மக்கள் தேவையை உணர்ந்து தொண்டு புரிந்திட, உலக மக்கள் ஒருவருக்கொருவர் அன்பு கொண்டு நல் புணர்வோடு வாழ வழி வகுக்கச் சிந்தித்தவர் பேடன் பவல் பிரபு ஆவார்.

இவர் முழுப்பெயர் றொபேட் ஸ்ரீபன்சன் சிமித் பேடன் பவல் என்பதே. அவரது குடும்பம் வீரதீரச் செயல்கள் பல புரிந்த குடும்பமாக விளங்கியது இக்குடும்பத்திலுதித்த எமது தந்தை பேடன் பவலும் தீரச் செயல்கள் புரிவதில் ஆர்வம் கொண்டு விளங்கினார். எல்லோரிடத்தும் அன்புடன் நடந்து கொள்ளும் மனோபாவம் உடைய இவர் துன்புறும் மக்களின் துயர் துடைப்பதிலேயே பெருமளவில் மகிழ்ச்சியும் நிறைவும் கொண்டார், கல்வியில் புத்திசாலியான மாணவன் என்ற நிலையினை அவர் பெறவில்லையாயினும் கடின உழைப்பும், சுறுசுறுப்பும், சங்கீதம், ஓவியம், விளையாட்டு நாடகக் கலை என்பவற்றில் காட்டிய தேர்ச்சியும் அவருக்கு நற்பெயரை ஈட்டிக் கொடுத்தன.

கல்வியை முடித்து இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றிய இவர் ஆபிரிக்காவில் பணி புரியும்போது காட்டிய உழைப்பினாலேயே 'இம்பீசா' எனும் பெயரைப் பெற்றார். இங்கு இவர் பெற்ற அனுபவமே சாரணிய இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளை உருவாக்கவும், இயக்கத்தை ஆரம்பிக்கவும் காரணமாயிற்று.

சாரண இயக்கம் பல நாடுகளுக்கும் பரவத் தொடங்கவே தம் பதவியைத் துறந்து முழுமூச்சுடன் சாரண வேலைகளில் ஈடுபட்டார் 1920 ஆம் ஆண்டில் உலக சாரண இயக்கத் தலைவர் எனும் பதவியைப் பெற்றார்.

சாரண வளர்ச்சிக்கு உழைப்பதில் தம் துணைவனுக்குச் சளைத்தவரில்லை என்பதைத் தம் அயராத உழைப்பினாலும், ஒத்துழைப்பினாலும் விளக்கிய இவரது துணைவியார் உலகப் பெண் சாரணர் இயக்கத் தலைவி ஆனார். இவ்வண்ணம் தன் துணைவியுடன் சேர்ந்து தலை சிறந்த அமைப்பு ஒன்றை மக்களுக்குத் தந்துதவிய பிரபு அவர்கள் தமது 84 ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார். ஓர் மனிதன் தனது கடின உழைப்பினாலும் அயராத முயற்சியினாலும் எதையுமே சாதிக்க வல்லவனாவான் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கிய இவரது பூதவுடல் அழிந்தாலும் புகழுடல் நிலைத்து நிற்கிறது.

திருமதி R J B சேவியர்

## ★ இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பிய அகதிகள் மட்டக்களப்பிலும் பட்டினிகிடந்து அவலம்!

இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பி மட்டக்களப்பில் வந்து மீளக் குடியமர்ந்த அகதிகள் தங்களுக்கு நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை என்றும் உணவுக்குப் பெரிதும் கஷ்டப்படுவதாகவும் மட்டக்களப்புச் செயலகத்தில் முறையிட்டுள்ளனர்.

"கப்பல் மூலம் வந்து திருகோணமலையில் இறங்கியதும் கொஞ்சம் பணம் தந்தார்கள் அத்துடன் நாம் கைவிடப்பட்டு விட்டோம் மட்டக்களப்பு திரும்பிய எமக்கும் கச்சேரி மூலம் எதுவித உணவு நிவாரணமோ, பணமோ வழங்கப்படவில்லை" என்றும் இவ்வகதிக் குடும்பங்கள் தெரிவித்துள்ளன.

வவுனியா வந்தடைந்த அகதிகளும் இவ்விதம் அவதிப்படுவதாகத் தகவல் வெளியாகியுள்ளதும் தெரிந்ததே.

### இம் மாதம் 5 கப்பல்களில் 3100 அகதிகள் வருவர்

இந்தியாவிலிருந்து இம்மாதம் ஐந்து கப்பல்களில் மேலும் 3100 அகதிகள் வருவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது

இரண்டு கப்பல்கள் மூலம் திருகோணமலைக்கு 1600 அகதிகளும், மூன்று கப்பல்கள் மூலம் 1500 அகதிகள் மன்னாருக்கும் வந்து சேர்வர்.

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலாளர் கிறிகிரி. டி. சில்வா இத் தகவல்களை வெளியிட்டார்.

### போலி ரூ.500 நோட்டுகள்

போலி 500 ரூபா நோட்டுக்கள் புழக்கத்தில் இருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அசல் நோட்டுகளுக்கும் போலிகளுக்கும் இடையில் சில வித்தியாசங்கள் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

### ஆங்கில அறிவை மேம்படுத்த..

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டம் பிரிவைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களின் ஆங்கில அறிவை விருத்தி செய்வதற்கான திட்டங்கள் பலவற்றை பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.எஸ்.வி. மகேசவேல் வகுத்துள்ளார்.

இத் திட்டங்களின் ஆரம்ப நடவடிக்கைகளாக மாணவர்களுக்கிடையே ஆங்கில எழுத்துக் கூட்டல் போட்டி, ஆங்கிலச் சொற்களை வசனமாக்கும் போட்டி, ஆங்கில மொழிமூலம் பொது அறிவுப் போட்டி முதலானவற்றை நடத்தவுள்ளார்.

இப் போட்டிகள் அனைத்தும் இவ்வாண்டு இரண்டாம் தவணை ஆரம்பத்தில் நடத்தப்படவுள்ளன. (18)

### இலட்சார்ச்சனை

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான இலட்சார்ச்சனை இன்று தொடங்கி தொடர்ந்து பத்துத் தினங்கள் வரை விரிவான வகையில் நடைபெறவுள்ளது.

### கலந்துரையாடல்

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்க ஓராண்டு நிறைவு விழா சம்பந்தமான கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு சங்கப் பணிமனையில் இடம்பெறவுள்ளது.

இதில் சகல சுருட்டு உற்பத்தி உரிமையாளர் சங்க நிர்வாகிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (04)

## விளையாட்டு மைதானம்

### நாவாந்துறை அணி வெற்றி

யாழ் கோட்ட மட்டத்தில் சென். அந்தனீஸ் விளையாட்டு மைதானத்தில் 15 வயதிற்குட்பட்ட பிரிவுகளுக்கிடையில், நடைபெற்ற இறுதி உதைபந்தாட்டப் போட்டியில் நாவாந்துறை சென் நீக்கிலஸ் மகா வித்தியாலய அணி அதனை எதிர்த்து மோதிய கொழும்புத்துறை சென் ஜோசப் மகாவித்தியாலய அணியை 3க்குப் பூஜ்ஜியம் என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

தொடக்கம் முதல் இறுதிவரை உற்சாகம் குன்றாமல் இரு அணிகளும் ஆடினாலும், சென் நீக்கிலஸ் அணி அரை இடைவேளைக்கு முன்பு 2 கோல்களையும், இடைவேளைக்குப் பின்பு ஒரு கோலையும் போட்டு தனது வெற்றியை நிச்சயப்படுத்திக் கொண்டது, அதேவேளை சென். ஜோசப் அணி கோல் போடக்கிடைத்த வாய்ப்புகளைக் கோட்டை விட்டதினால் தோல்வியைத் தழுவவேண்டியதாயிற்று.

பி. ஆர். தம்பிநாயகம், எம். எஸ். விமலராஜ ஆகியோரின் அனுசரணையுடன் ஏ.தேவராசா நடுவராகக் கடமையாற்றினார்,

### கரபந்தாட்ட போட்டி

நல்லூர் தெற்கு விளையாட்டுக்கழக அணிக்கும், பாரதி விளையாட்டுக்கழக அணிக்குமிடையில் பாரதி விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செற் அப் முறையிலான கரபந்தாட்டபோட்டியில் நல்லூர் தெற்கு அணி இரு செற்றுக்கு ஒன்று என்ற கணக்கில் வெற்றியீட்டியது.

ஸ்கோர் விவரம் 12:15, 15:12, 15:7

நடுவராக கே. நாகேந்திரனும், உதவிநடுவராக எம் மோகனும் கடமையாற்றினார்கள்.

### அரியாலை அணி வென்றது

யாழ் உதைபந்தாட்ட லீக்கின் முன்னை நாள் தலைவர் டாக்டர் ஜே.பி சி பிலிப்ஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக யா உ.லீக்கினால் ஒழுங்கு செய்யப்பட்ட போட்டியின் முதல் ஆட்டம் நேற்று இடம்பெற்றது.

இந்த ஆட்டத்தில் அரியாலை அணி அதனை எதிர்த்து ஆடிய கலைவாணி அணியை 4:0 என்ற கோல்கள் கணக்கில் தோற்கடித்தது. நடுவராக எஸ் எம். மரியநாயகமும், உதவி நடுவர்களாக ஜீ எம்.செபஸ்தியாம்பிள்ளை, கப்ரின் டீ ஏ,எம்.குணசிங்கம் ஆகியோரும் கடமையாற்றினார்கள்.

இந் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யா.உ லீக்கின் தலைவர் எஸ் ரி.கணநாதன் உரையாற்றுகையில், தற்பொழுது லீக்கின் 'ஏ'. 'பி' ஆகிய இரு பிரிவுகளே உள்ளன வெகு சீக்கிரத்தில் 'சி' பிரிவு ஒன்றையும் லீக் உருவாக்கவுள்ளது. இப் பிரிவில் இணைந்து கொள்ளும் கழகங்கள் கால் அணிகள் இன்றியும் ஆட்டங்களில் கலந்து கொள்ள இடமளிக்கும் வகையில், தற்பொழுது நடைமுறையில் இருக்கும் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படவுள்ளது என்றும், 'சி' பிரிவில் இணைந்து கொள்ளும் கழகங்களுக்கு மத்தியில், போட்டி ஒன்றினை நடத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்யுமாறு போட்டிக் குழுச் செயலாளர் ஏ தேவராசா லீக்கினால் பணிக்கப்பட்டுள்ளார் என்றும் குறிப்பிட்டார்.

### சென். அந்தனீஸ் அணி தகுதி

ஒன்பது மாவீரர்களின் ஞாபகார்த்தமாக நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டப்போட்டியின் அரை இறுதியாட்டத்தில் பாஷையூர் சென் அந்தனீஸ் அணி அதனை எதிர்த்து மோதிய இங் சென்ஹென்றியன் அணியை 2:1 என்ற கோல் அடிப்படையில் தோற்கடித்தது

எம் டி தம்பிராசா, எம் பிரான்சிஸ் ஆகியோரின் அனுசரணையுடன் எஸ்.எம் புலேந்திரன் நடுவராகக் கடமையாற்றினார்.

இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. அதில் பாஷையூர் சென். அந்தனீஸ் கழகத்தை எதிர்த்து றோயல் கழகம் ஆடும். (16)

## எம். ஜி. ஆரும் கைதாகி இருப்பார் என்கிறார் பண்ருட்டி

"புரட்சித்தலைவர் எம். ஜி. ஆர். 'உயிரோடு இருந்தால் விடுதலைப் புலிகள் விவகாரத்தில் அவரும் 'தடா' சட்டத்தில் கைது செய்யப்பட்டிருப்பார்" என்று பண்ருட்டி ராமச்சந்திரன் கூறியுள்ளார்.

"முதல்வர் ஜெயலலிதா செய்துவருவது அத்துமீறிய அதிகாரத்துஷ்பிரயோகம்" என்றும் அவர் சொன்னார்.

### கண்ணிலே - பூ!

மண்ணிலே பூ மலர்ந்தால்
மனமது மகிழ்விற் றுன்னும்!
விண்ணிலே பூ மலர்ந்தால்
வானமது துறக்க மாகும்!
கண்ணிலே பூ வளர்ந்தால்
கங்குலாக பகல் தோன்றும்!
தண்ணீரில் பூ மலர்ந்தால்
தடாகமது பூங்கா வாகும்!
பெண்ணிலே பூ தவழ்ந்தால்
பெரு ஞானிக்கும் மோகம் வரும்!
......... அதி மோகம் வரும்!!

கவிஞர்:— உ.இ.தமிழ்ச்செல்வன்
கவிதை வெளியீடு:— க தில்லைநாதன், தமிழ்ச் செல்வன் கல்வி நிலையம், கொழும்புத்துறை.

(இக் கவிஞருக்கு கண்ணிலே பூ வளர்ந்து கண்பார்வையற்றுள்ளார்) 02043


### சிறுவிளம்பரம்

**கல்வி**

பாலர் ஆசிரியர் பயிற்சி பெறலாம். க. பொ. த. (சா / த) கடைசித் தகைமையாகும். நேரில் வர முடியாதோர் தபால்வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், மே/யா உயர் கலைக் கல்லூரி, 73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி - யாழ்ப்பாணம். 02038

# ஏவுகணைகளை மறைத்துவைத்து லிபியா உஷார் நிலையிலுள்ளது

மேற்கு நாடுகளின் தாக்குதல் இடம்பெறக்கூடுமென்ற அச்சம் காரணமாக லிபியா நடமாடும் ஏவாயுதங்களை மறைத்து வைக்க ஆரம்பித்திருப்பதுடன் வான்பாதுகாப்பையும் பலப்படுத்தி வருவதாக அமெரிக்க அதிகாரிகள் கூறினர்.

சோவியத்தில் செய்யப்பட்ட ஸ்கட் ஏவாயுதங்களை மேற்கு நாட்டுத் தாக்குதலிலிருந்து பாதுகாப்பதற்காக லிபியா அவற்றை வேறு இடங்களுக்கு அகற்றி வருவதற்கு கடந்த சில வாரங்களாக ஆதாரம் கிடைத்து வருவதாக ஒரு அதிகாரி கூறினார்.

அமெரிக்க விமானத்தில் குண்டுவைத்த இரு லிபியர்களை ஒப்படைக்குமாறு மேற்கு நாடுகளின் நிர்ப்பந்தம் அதிகரித்துவரும் சமயத்தில் லிபியா மேற்கொண்டு வரும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து வாஷிங்டன் ரைம்ஸ் பத்திரிகை முதன் முதல் செய்தி வெளியிட்டிருந்தது.

## வளைகுடா பாதிப்பு

## நாடு மீண்ட இலங்கையருக்கு மேலதிக நஷ்டஈடு, கொடுப்பனவு

வளைகுடா யுத்தப் பாதிப்பினால் நாடு திரும்பிய இலங்கையருக்கு நஷ்டஈட்டுடன் மேலதிகக் கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

வளைகுடா யுத்தத்தின் போது குவைத், ஈராக் ஆகிய நாடுகளிலிருந்து வெளியேறியோருக்கு 2500 டொலர் முதல் 4000 டொலர் வரையும் ஒரு குடும்பத்துக்கு 5000 டொலர் முதல் 8 ஆயிரம் டொலர் வரையும் நஷ்டஈடு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நஷ்டஈடு எப்போது வழங்கப்படும் என்பதை ஐக்கிய நாடுகள் சேவையின் நஷ்டஈட்டுக் குழு விரைவில் அறிவிக்கும் என்றும் 1990 ஆகஸ்ட் 2முதல் 1991 மார்ச் 2-ஆம் திகதி வரையிலான எல்லைக்குள் மேற்படி இரு நாடுகளிலும் இருந்து வெளியேறியோருக்கு ஆகக் குறைந்தது 2500 டொலர் நஷ்டஈட்டுத் தொகையும் குடும்பத்துக்கு 5000 டொலர் நஷ்டஈட்டுத் தொகையும் வழங்கப்படும் என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தொகையைப் பெற்றுக்கொள்ள எழுத்துமூல அத்தாட்சியை கமிஷன் கேட்டுள்ளது என்றும் எனினும் விண்ணப்பிப்பவர்கள் குறிப்பிட்ட காலத்தில் அங்கு இருந்தார்கள் என்பதை நிரூபிக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒழுங்கான, கட்டுப்பாடான அரசே இன்று தேவையாம்

“வட, கிழக்கு யுத்தத்திற்கு சில மாதங்களில் முடிவு காணப்படும்” என்று பிரதமர் டி.பி. விஜயதுங்கா நேற்று வலப்பனையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

‘இன்றைய நிலையில் ஒழுங்கான கட்டுப்பாடான அரசாங்கம் ஒன்று தேவை. ஜனநாயகம் அழிந்தால் நாட்டில் இராணுவ ஆட்சி ஒன்று ஏற்படும் துவக்குகளும், ரவைகளுமே ஆட்சிபுரியும்’ சர்வாதிகாரம் ஏற்படும், நாடு அழிந்துவிடும்.

“வடகிழக்கு யுத்தத்தை சில மாதங்களுக்குள் முடிவுக்குக் கொண்டுவருவோம்” என்றும் அவர் சொன்னார்.

## ‘விருது பெற்ற நெடுஞ்செழியன்’

“அந்தக் காலத்தில் நெடுஞ்செழியன்கள் விருதுகளையும், நிதிகளையும் புலவர்களுக்கு, அறிஞர்களுக்கு வழங்கினார்கள். ஆனால் விருதையும், நிதியையும் பெறுகின்ற நெடுஞ்செழியனாக நான் இருக்கிறேன்” இவ்வாறு திருவள்ளுவர் விருது பெற்றுள்ள நாவலர் நெடுஞ்செழியன் கூறினார்.

## நாளை சுகாதார வார இறுதிநாள் 'நிகழ்ச்சிகள்

நல்லூர் பிரதேச சபையின் சுகாதார வார இறுதி நாள் நிகழ்ச்சியாக நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணிக்குத் திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள பலாலி ஆசிரிய கலாசாலை மண்டபத்தில் சுகாதார விழாவொன்று நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நல்லூர் பிரதேச சபையின் விசேட ஆணையாளர் திரு. ஆ. மகாலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ் மாவட்டம் பிரதி ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் பிரதம விருந்தினர் ஆகவும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி, கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம. யோகவிநாயகன், யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட விரிவுரையாளர் டாக்டர் செ. சு. நச்சினார்க்கினியன், பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர் திரு. ஆர். எம். நடராசா, உள்ளூராட்சி நிழல் நிர்வாகத்தைச் சேர்ந்த திரு. மா. பாபு ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு கருத்துரை வழங்குவார்கள். சனசமூக நிலையங்களும், பலாலி ஆசிரிய கலாசாலை மாணவர்களும் வழங்கும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## பாண் நிறை மோசடி

வவுனியாவில் பாணின் நிறை 450 கிறாமுக்குக் குறைவாக உள்ளது என்றும் 50 முதல் 75 கிறாம் வரை நிறை குறைவாக உள்ளது என்றும் அரச அதிகாரி ஒருவர் வர்த்தகர்கள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

## ‘தொண்டாவின் யோசனை

## பிழையென்றால் சரியான யோசனையைக் கூறலாமே’

“அமைச்சர் தொண்டமானின் சமாதான யோசனையைப் பிழையெனக் கூறுவோர் அதற்குமாற்றாகச் சரியான யோசனையைக் கூறவேண்டும்,” என்று சுற்றுலாத்துறை ராஜாங்க அமைச்சர் காமினி லொக்குகே நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

“பலர் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஆலோசனைகூறாது அரசாங்கத்தைக் குறைகூறியே காலத்தைக்கழிக்கின்றனர். சிறுபான்மையினர் நலனும் பேணப்பட வேண்டும்” என்றும் அவர் மேலும் சொன்னார்.

## ‘அந்த சூழ்நிலை’ குறித்து சபையில் பிரதமர் கூறியது

“இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான யோசனைகளை விடுதலைப் புலிகளுக்கு அரசாங்கம் முன்வைக்கக்கூடிய சூழ்நிலை உருவாகும் வரை, அந்த யோசனைகளை அவர்கள் ஏற்கக்கூடிய சூழ்நிலை உருவாகும் வரை, ஆயுதப் படையினர் அவர்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை தொடர்ந்து கொண்டேயிருப்பர்.

இவ்வாறு பிரதமர் டி.பி. விஜயதுங்க நேற்று முன்தினமிரவு பாராளுமன்றத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

## குத்துச்சண்டை வீரர்களும் அவர்கள் குத்துக் கரணங்களும்

உலகப் புகழ்பெற்ற குத்துச்சண்டை வீரர் மைக் ரைசன் 18 வயது அழகு ராணியை மானபங்கப்படுத்தினார் என்று சுமத்தப்பட்ட வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு, எதிர்வரும் 6ஆம் திகதி கோட் வழங்கப்போகும் தீர்ப்பை எதிர்பார்த்து உள்ளார் என்பது தெரிந்ததே.

கறுப்பு இன குத்துச்சண்டை வீரர் காவல்துறையினால் குற்றம் சாட்டப்பட்டு தண்டனை பெறுவது இது தான் முதற் தடவையல்ல. ரைசனுக்கு முன்பு பல பிரசித்தி பெற்ற குத்துச்சண்டை வீரர்களும் தண்டனை பெற்றுள்ளனர்.

ஜக் ஜோன்சன் வெள்ளையர்களை அடித்ததிற்கும் வெள்ளை இனப் பெண்களுடன் அநாகரிகமாக நடந்து கொண்டதிற்கும் 1 வருட சிறைத்தண்டனையும் 1000 டொலர் அபராதமும் செலுத்தியுள்ளார்.

கலோவி ஜோன்சன் தனது மனைவியை மேல் மாடியில் இருந்து தூக்கி எறிந்த குற்றத்திற்காக நீண்ட காலம் சிறையில் இருந்தார். ஈவான் டிஜிசல் வாகன போக்குவரத்து சர்ச்சையில் ஒருவரைக் கொலை செய்த குற்றத்திற்காக மறியலில் வைக்கப்பட்டார். தற்சமயம் அவருக்கு எய்ட்ஸ் நோய் இருப்பதால் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

றொக்கி கிருசியானோ இரண்டாவது உலக யுத்தத்தின் போது ஒரு படை வீரனை அடித்ததற்காகவும், களவெடுத்ததற்காகவும் மறியலுக்குச் சென்றார் ஜோக்கி ஜியாடெலா பெற்றோல் நிலையத்தில் கொள்ளையடித்ததற்காக தண்டனை பெற்று மறியலில் இருந்தார்.

ஆனால் மொகமட் அலி இதில் விதி விலக்கு. ஆயுதப் படையில் சேர மறுத்ததினால் அவரின் அகில உலக அதிபார குத்துச்சண்டை வீரருக்கான பட்டம் அவரிடம் இருந்து பறிக்கப்பட்டாலும் சிறை செல்லவில்லை அதேவேளை அமெரிக்க அரசின் சமாதானத் தூதுவராக அரபு நாடுகள் பலவற்றிற்கு சென்றுள்ளார்.(16

## விடுதலையை நேசிக்கும் இனிய மக்கள் துரோகிகளை வளரவிடமாட்டார்கள்

**- கவிஞர் வாஞ்சிநாதன்**

“தமிழினம் என்று உருவாகியதோ அன்றிலிருந்து துரோகிகளும் காட்டிக்கொடுப்பவர்களும் காலத்துக்குக் காலம் உருவாகி வருகிறார்கள்.”

இவ்வாறு நேற்று முன்தினம் காலை சாவகச்சேரி பஸ் நிலையத்தில் நடைபெற்ற சமூகத்துரோகிகள் நால்வரை மக்கள் முன் அம்பலப்படுத்தும் நிகழ்வின்போது பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் உரையாற்றிய தமிழீழ மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் கவிஞர் மூ. வே. யோ வாஞ்சிநாதன் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்;“அன்று வீரபாண்டிய கட்டப்பொம்மனுக்கு ஒரு எட்டப்பன் இருந்தான். பண்டாரவன்னியனுக்கு ஒரு காக்கைவன்னியன் இருந்தான். கட்டப்பொம்மனும், பண்டாரவன்னியனும் காட்டிக்கொடுத்த அவ்வினத் துரோகிகளால் அழிக்கப்பட்டனர்.

இங்கே எம்முன் நிற்கும் தமிழர்களும் இன்று எம்மைக் காட்டிக்கொடுத்துள்ளார்கள். இந்தத் துரோகிகளால் எம்மக்களும், போராளிகளும் இறக்க நேரிட்டது [illegible] தான். இவர்களால் [illegible] போராட்டத்தில் இ[illegible]னடைவு ஏற்பட்டது உண்மை தான் ஆனால், எத்தனை துரோகிகள் வந்தாலும் 40 லட்சம் மக்களுடன் பின்னிப்பிணைந்து நிற்கும் எமது உயிரினும் மேலான விடுதலைப் போராட்டத்தை முற்றுமுழுதாக அழிக்க முடியாது. காக்கைவன்னியர்களும், எட்டப்பர்களும் படிப்படியாக எமது மண்ணில் இருந்து அகற்றப்படுவார்கள் இனத்தைக் காட்டிக்கொடுக்க முன் வரும் சமூகத்துரோகிகளை எமது மக்கள் இனம் காட்ட முன்வர வேண்டும் அப்போது தான்; நமது விடுதலைப் பாதையில் உள்ள களைகளை நாம் அகற்ற முடியும்...

பிஞ்சு நெஞ்சங்களாலும், விடுதலையை நேசிக்கும் இனிய மக்களாலும் வழி நடாத்தப்படும் இந்தப் போராட்டத்தையும் முப்பதாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் தமது உயிரை அர்ப்பணித்துக் கட்டிக் காக்கும் சுதந்திரத் தீயையும் இப்படியான இனத் துரோகிகள் எச்சில் இலைகளுக்கு ஆசைப்பட்டு அழித்துவிடாமல் மக்கள் பாதுகாக்க முன்வர வேண்டும். இது உங்கள் போராட்டம். இதை வளர்ப்பது உங்கள் கடமை [illegible]

இவர்களை விடலாமா? என்று கவிஞர் கேட்டபோது ‘கூடாது’ என்று மக்கள் பதிலளித்தனர்.

கூட்டத்தில் இருந்த பெண்கள் பலர் துரோகிகளைத் திட்டிவிட்டுச் சென்றனர்.

## ரணில் தகவல்

வவுனியா, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் தமிழ் மொழி மூலக் கல்விக் கல்லூரிகள் அமைக்கப்படவுள்ளனவாம்.

இவற்றில் சுமார் 100 தமிழ் மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படும் என்று அமைச்சரவையின் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

## தொலைக்கல்வி கற்கைநெறி

பட்டதாரியல்லாத பயிற்றப்படாத பயிலுநர் ஆசிரியர்) ஆசிரியர்களுக்குத் தேசிய கல்விநிறுவனத்தினால் நடாத்தப்படும் தொலைக்கல்வி கற்கை நெறிப் பாடங்களுக்குப் போதனாசிரியர்களாகவும் எழுத்து மூலம் தொடர் பாடல் ஆசிரியர்களாகவும் சேவையாற்ற விரும்புபவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வி டிப்ளோமாச் சான்றிதழுடனான பட்டதாரி ஆசிரியர்கள், பயிற்றப்பட்ட பின்னர் குறைந்தது 10 வருடங்களாவது கற்பித்தல் அனுபவமுடையவர்கள், அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களினால் வழங்கப்பட்ட டிப்ளோமாச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான சான்றிதழைக் கொண்ட பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

விண்ணப்பதாரிகள் தங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தினைப் பாடசாலை அதிபரின் ஊடாக எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், தொழிற்கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம், மகரகம என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும் எனவும் கல்வித்திணைக்கள வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. 04

## நீரால் ‘எரியும்’ மாநிலங்கள்

“தமிழக-கர்நாடக மாநிலங்கள் தண்ணீரால் பற்றி எரிவதுதான் ஆச்சரியமாயிருக்கிறது” என்று பாரதிய ஜனதா[illegible] தலைவர் அடல் பி[illegible]பாய் கூறியுள்[illegible]

# யாழ். மாவட்ட மாணவருக்கு ஜனவரி மாத உணவு முத்திரை

யாழ் மாவட்ட பாடசாலை மாணவர்களுக்குரிய ஜனவரி மாத உணவு முத்திரைகள் செயலகத்துக்கு வந்துள்ளன

மாணவர்களின் தொகை விவரங்களை தெரிவித்தவர்களுக்கு நேற்று முதல் ஒவ்வொரு பிரதேச செயலகங்கள் ஊடாக இம் முத்திரைகள் வழங்கப்படுகின்றன.

இதுவரை மாணவர் விவரங்களைச் சமர்ப்பிக்காத பாடசாலைகளும், பிரதேச செயலாளர்களும் உடனடியாக யாழ் சமூக சேவைத்திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. 47, 25

# யாழ். கல்விப்பணிப்பாளருக்கு ஒரு வருட சேவை நீடிப்பு?

யாழ் கல்விப்பணிப்பாளராக தற்போது கடமையாற்றி எதிர்வரும் மே மாதத்துடன் அறுபது வயதைப் பூர்த்தி செய்து இளைப்பாறவுள்ள இரா சுந்தரலிங்கத்திற்குமேலும் ஒரு வருடம் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்ற சேவை நீடிப்பு மத்திய கல்வி அமைச்சினால் வழங்கப்படலாம் என கொழும்புச்செய்திகள் ஊகம் தெரிவிக்கின்றன

பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுனிலைக்கும், பணிப்பாளர் சுந்தரலிங்கத்துக்கும் இவ் விசேடசலுகை வழங்கப்படவுள்ளதாக கல்வியமைச்சு வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

அறுபது வயதுக்கு மேல் ஒப்பந்த அடிப்படையில் சேவை நீடிப்புசம்பந்தப்பட்ட அமைச்சரின் சிபார்சின்படியே வழங்கப்படுவது வழமையாகும். 50

# பாதுகாப்பு வலயத்திற்கு இஸ்ரேல் பின்வாங்கியது

இஸ்ரேலிய துருப்புகள் நேற்று தென் லெபனானில் உள்ள பாதுகாப்பு வலயத்திற்கு பின்வாங்கிவிட்டது.

எனினும் தென்லெபனான் ஷியாட் முஸ்லிம் தீவிரவாதிகள் தொடர்ந்தும் அங்கிருந்து இஸ்ரேல் மீது ஷெல் தாக்குதலை மேற்கொண்டால் இஸ்ரேல் துருப்புகள் மீண்டும் தென்லெபனானினுள் ஊடுருவும் என இஸ்ரேல் எச்சரித்துள்ளது.

# மேலும் சில தீவக மக்கள் நேற்றும் கப்பலில் பயணம்

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் நேற்றும் நூற்றுக்கு மேற்பட்ட தீவக மக்கள் குமண கப்பலில் தீவுப்பகுதிக்குச்சென்றுள்ளனர்.

இன்று தீவுப்பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் வரவிருக்கும் மக்களையும் யாழ்ப்பாணத்துக்குரிய தபால்பொதிகளையும் ஏற்றிக் கொண்டு குமண சம்பவ பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது 47

கஜ்கிஸ்தான் ஜனாதிபதி

# முதற் தடவையாக இந்தியா வருகை

சோவியத்யூனியனிலிருந்து பிரிந்த கஜ்கிஸ்தான் குடியரசின் ஜனாதிபதி இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ளார். சோவியத்யூனியன் பிரிந்தபின் அப்பகுதியின் ஜனாதிபதி ஒருவர் இந்தியாவுக்கு வருவது இதுவே முதல் தடவை எனத் தெரிவிக்கப்படுகிறது.

வருகை தந்திருக்கும் தூதுக்குழுவினர் அரசுத்தலைவர்களைச் சந்தித்த பின்னர் இந்திய தொழில் அதிபர்களையும் சந்திப்பர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய ரஷ்யாப்பகுதியைச் சேர்ந்த சில குடியரசுகள் ஈரான், பாகிஸ்தான் நாடுகளைச் சார்ந்து போகும்போது கஜ்கிஸ்தான் முஸ்லிம் குடியரசு இந்தியாவை நாடுவது முக்கியமானது என பி.பி.சி தெரிவித்தது.

எண்ணெய் வளமும், நிலக்கரி வளமும் கூடிய இக்குடியரசில் இருந்து வந்த தூதுக்குழுவினர் இருநாடுகளுக்குமிடையேயான வணிகம், அறிவியல் பண்பாடு என்பவை தொடர்பாக கூட்டறிக்கை வெளியிடுவர் எனவும், விரைவில் இந்தியாவுடன் இராஜரீகதொடர்புகளை ஏற்படுத்துவது பற்றியும் அறிக்கை வெளியிடுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தலின் பின்

# பஞ்சாப்பில் வன்முறை அதிகரிப்பு

பஞ்சாப்பில் நடந்து முடிந்த பொதுத் தேர்தலின் பின் வன்முறை அதிகரித்திருப்பதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன சங்கூர் மாவட்டத்தில் நால்வர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் மேலும் நால்வர் மற்றொரு இடத்தில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக பி.ரி ஐ செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

சீக்கியத் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் காரணமாக 1 கோடியே 30 இலட்சம் வாக்காளர்களில் முக்கால்வாசிப் பேர் வாக்களிக்கவில்லையென்பதும், பல சீக்கிய அரசியல் கட்சிகள் தேர்தலைப் பகிஷ்கரித்தன என்பதும் தெரிந்த செய்திகளே

இத் தேர்தலின் மூலம் இந்திரா காங்கிரஸ் கட்சி பஞ்சாப்பில் தனியாக அரசு அமைக்கவும் மத்திய அரசில் தனது பலத்தை அதிகரித்துக் கொள்ளவும் வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

# தேசிய சேமிப்பு வங்கிகளில் வாடிக்கையாளர் அதிகரிப்பு

நாட்டில் உள்ள தேசிய சேமிப்பு வங்கிகளில் வாடிக்கையாளர்களின் தொகை கடந்த ஆண்டு அதிகரித்துள்ளதாக இவ்வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஹோம் பினான்ஸ் போன்ற நிதிக்கம்பனிகளில் வாடிக்கையாளர் வைப்பிலிட்ட பணத்துக்கு நடந்த சம்பவங்களையடுத்து இந்தவங்கியில்முதலீடு செய்வோர் தொகை அதிகரித்துள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

மக்கள் வங்கி, இலங்கை வங்கி குறித்து அரசு தற்போது தெரிவித்துள்ள தகவல்களினால் எதிர் காலத்தில் இந்த வங்கியில் வைப்பிலிடுவோர் தொகை அதிகரிக்கும் எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

ஏனைய வங்கிகளை விட இந்த வங்கியின் வட்டி வீதம் அண்மையில் அதிகரிந்ததும் குறிப்பிடத்தக்கது.

ஜெயலலிதா...

வாகின்றது என எதிர்க்கட்சியினர் சுட்டிக்காட்டுகின்றனர் என தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

உலகக்...

இந்த உலகதொடர் கிரிக்கெட் போட்டியில் முதன் முறையாக தென்னாபிரிக்க அணியும் பங்குபற்றுகிறது

பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகள், ஸ்ரீலங்கா, சிம்பாபே ஆகியவையும் பங்குபற்றும் ஏனைய அணிகளாகும்

பஞ்சாப்...

பதோடு மட்டுமல்லாது 545 ஆசனங்கள் கொண்ட இந்திய பாராளுமன்றத்தில் காங்கிரஸ் 242 ஆசனங்களை பெற்று தனது பெரும்பான்மையை ஸ்திரப்படுத்திக் கொண்டுள்ளது.

பஞ்சாப் தேர்தலில் அம் மாநிலக்கட்சிகள் போட்டியிடாத நிலையில் இந்திரா காங்கிரஸ்பாராளுமன்றத்தில் தனது நிலையை ஸ்திரப்படுத்தவே இத்தேர்தலில் பங்குபற்றியது என குற்றஞ்சாட்டப்படுவது தெரிந்ததே.

ஜெயலலிதாவின் விஜ.

தின் கால்வாசியை பொலிஸார் சுற்றிவளைத்து முதல் வருக்குப்பாதுகாப்பு கொடுத்ததை தூரதர்ஷன் ஒளிபரப்பியது இது முதல்வரின் வருகையும், முதல்வரைப் பாதுகாக்க பொலிஸார் எடுத்த நடவடிக்கையுமே மரணங்கள் ஏற்படக் காரணங்கள் என்பதை ஊர்ஜிதம் செய்வதைப் போல் உள்ளது என்று சுட்டிக்காட்டிய கருணாநிதி இவ் விவகாரத்தில் அரசின் சார்பில் அரசியல் கட்சிகளைக் கண்டித்து அறிக்கை வெளியிடுவதையும் குறைகூறியுள்ளார்

749 அகதிகள்...

பலில் வருகின்றனர்.

இவர்களில் ஆண்கள் 262, பெண்கள் 233, குழந்தைகள் 254 பேர் ஆவர். இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பும் ஐந்தாவது தொகுதி இவர்களாகும். இவர்களுக்குப் பாதுகாப்பாக இந்தியக் கடலோரப் பாதுகாப்புக் கப்பலும் வருகிறது

இதுவரை ஏறத்தாழ 3500 அகதிகள் இலங்கை திரும்பியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது

23 விமானப்...

10 நிமிட நேரம் புலிகள் நடத்திய தாக்குதலையடுத்து உதவிக்குவந்த விமானப்படையினர் தமது முகாம்களுக்குப் பின்வாங்கி ஓடினர்.

நேற்று நடைபெற்ற இத் தாக்குதலை கொழும்பில் கூட்டுப்படைத் தலைமையகமும் ஊர்ஜிதம் செய்தது.

கிழக்கு மாகாணத்தில் புலிகளின் தாக்குதல்கள் குறைவடைந்துவிட்டதாக இராணுவப் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்க கூறி 24 மணி நேரத்தினுள் இத்தாக்குதல் நடைபெற்றுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

பிரதமர் சொல்கிறார்

# உதவி வழங்கிய நாடுகள் நிபந்தனையிடவில்லையாம்

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் எதுவித நிபந்தனைகளையும் விதிக்கவில்லை என்று பிரதமரும் நிதியமைச்சருமான டி, பி விஜேதுங்க நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எம், பி ஒருவரின் கேள்விக்கு பதிலளித்த பிரதமர் இலங்கையில் மனித உரிமைகள் பேணப்படுவது குறித்து உதவி வழங்கும் நாடுகள் பாராட்டுத் தெரிவித்தன எனவும் அவர் மேலும் சொன்னார்.

உதவி வழங்கும் நாடுகள் இலங்கைக்கு நிபந்தனைகள் விதித்துள்ளதாக ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் கடந்த வாரம் கொழும்பில் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்ததும் குறிப்பிடத்தக்கது.

தேசிய வீடமைப்புத் திணைக்கள

# ஆறு ஊழியர்களின் திரிசங்கு நிலை

யாழ் தேசிய வீடமைப்புத் திணைக்களத்தில் பணிபுரிந்து வடகிழக்கு மாகாண நிர்மாணத் திணைக்களத்துக்கு மாற்றம் பெற்ற ஆறு ஊழியர்கள் தற்போது திரிசங்கு நிலையில் உள்ளனர்.

தேசிய வீடமைப்புத் திணைக்களமும் வடகிழக்கு மாகாண நிர்மாணத் திணைக்களத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

தற்போது தேசிய வீடமைப்புச் செயலக கட்டடத்தையும் இந்த ஆறு ஊழியர்களையும் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கும்படி வடகிழக்கு மாகாண கட்டிட நிர்மாண அமைச்சு செயலாளர் எஸ் சுப்பிரமணியம் யாழ் நிர்மாணத்திணைக்களத்தை பணித்திருந்தார்.

ஆனால் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை யாழ் தேசிய வீடமைப்பு செயலக கட்டடத்தை மட்டுமே பொறுப்பேற்றது. இந்த ஊழியர்களைப் பொறுப்பேற்க மறுத்துவிட்டதால் இவர்கள் தாம் இனி எங்கே கடமையாற்றுவது என்ற நிலையில் உள்ளனர். 14

# ரஞ்சனுக்கு முத்திரை

கடந்தவருடம் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட முன்னாள் பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன நினைவாக ஒரு ரூபா பெறுமதியான முத்திரை ஒன்று வெளியிடப்படவுள்ளது.

# சிவசேனை இயக்கம் மீண்டும் தலைதூக்குமா?

இந்திய மஹாராஷ்டிர மாநிலத்தில் சிவசேனை இயக்கம் மீண்டும் செல்வாக்குப் பெறுமா என்பதைக் கண்டறிய சந்தர்ப்பம் வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது பெப்ரவரி 25 வருகிற செவ்வாய்க்கிழமை மாநிலத்தில் நடைபெறும்மாவட்ட ரீதியிலான ஒரு வாக்கெடுப்பின் மூலம் இதனை அறிந்து கொள்ள முடியும் என பி,பி. ஸி. தெரிவித்துள்ளது.

பம்பாய் நகரச் சுற்றாடலில் உயர் சாதி இந்துக்களிடையே பரவலான செல்வாக்கைப் பெற்றிருந்த போதிலும் மராட்டிய மாநிலத்தின் கிராமப்புறங்களிலே கீழ்மட்ட மக்களிடத்திலே இதற்கு ஆதரவு குறைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிவசேனை சாதிப்பிரச்சினையைக் கொண்டிருப்பதாலும், ஜனதா தளம் அடிப்படை ஸ்தாபன அமைப்பு குலைந்திருப்பதனாலும் வரப்போகும் மாவட்டத் தேர்தலில் காங்கிரசின் கை ஓங்கும் என அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

பம்பாயில் தமிழர்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டதும், பசுவதைத் தடை இயக்கத்தைமுன்னின்று நடத்தியதும் இந்தச் சிவசேனை இயக்கம் என்பது தெரிந்தவையே.

# மீனவர் மீது கலிபர் தாக்கு

அரியாலை தென்பகுதி கடற்பகுதியில் தொழிலிலீடுபட்ட மீனவர்கள் மீது கல்முனை பந்தலடியில் உள்ள படையினர் கலிபர் தாக்குதல்களை மேற்கொண்டனர்

இதனால் மீனவர்கள் கடலில் குதித்து மயிரிழையில் உயிர் தப்பியதாகவும், வள்ளம் சிறு சேதமானதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 47, 14

பாராளுமன்றத்...

எம் பி.களுக்கு பொருத்தமான வதிவிடம் அமைக்கப்படும்.

பாராளுமன்றத்துக்கு அருகில் இது கட்டப்படவுள்ளது எனவும் இதற்கு 27 கோடி ... தேவையென மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் ...னார்.

கைப்பற்றப்பட்ட...

- ☐ ஜே. ஆர். குண்டுகள் - 08
- ☐ சப்பாத்து - 17 சோடி
- ☐ தண்ணீர்க்கன் - 13
- ☐ தண்ணீர்க்கான்கோல்சர்-16
- ☐ கிளீனிங்றொட் - 01
- ☐ வோக்கிடலர்டெக் - 01
- ☐ றெயின்கோட் - 01
- ☐ மிலிற்றிடேட் - 08
- ☐ தொப்பி - 04
- ☐ கத்தி - 2
- ☐ விசில்கயிறு - 01
- ☐ விமானப் படை பரட் தொப்பி - 10
- ☐ ஏ. கே கோல்சர் - 19
- ☐ ரி. 81 எல். எம், ஜி கோல்சர் - 01

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்)லிமிற்றெட் நிறுவனத்தினர் ... ல்விலங்காடு டச்சுவீதி 'லஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்... 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது